பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 11 ஞாயிற்றுக்கிழமை 26.12.2021 கதிர் 279

## வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம்!

## மன்னார் பொலிஸில் இருவர் சரணடைவு

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் இன்று மதியம் குடும்பஸ்தர் ☞2

# ஆழிப்பேரலையின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் ஆறாத்துயரில் உறவுகள் ஒப்பாரி வைத்து அழுகை

## யாழில் வடமராட்சி கிழக்கில் பிரதான நிகழ்வு





ஆழிப்பேரலை பேரனர்த்தம் ஏற்பட்டு 17 ஆண்டுகள் கடந்தும் ஆறாத்துயரில் உறவுகள் இன்று ஒப்பாரி வைத்து அழுத காட்சி அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது.

கடந்த 2004ஆம் ஆண்டு 'சுனாமி' எனும் ஆழிப்பேரலை ஏற்பட்டதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.


அதன்17ஆம்ஆண்டுநினைவேந்தல் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட வடமராட்சிகிழக்கில்பிரதானநினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு சுமார் ஆயிரத்து முப்பத்து எட்டு பேர் சுனாமி அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்டனர்.

பிரதான நிகழ்வு உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நினைவேந்தல் குழுவின் தலைவர் வே. தவராசா தலைமையில் இடம்பெற்றது.

நினைவிடத்தில் நாடாளுமன்ற ☞2



## ஐ.நா. நேரில் களமிறங்கும்

### அரசுக்கு எதிரணி எச்சரிக்கை

2022 மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரை ஆட்சியாளர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் எனத் தெரியவில்லை. உறுப்புரிமை நாடுகள் இம்முறை இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கமாட்டார்கள். நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கையில் அவர்கள் நேரில் களமிறங்குவார்கள். ☞2

## இளவாலையில் இளைஞரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

யாழ்., இளவாலை சந்தியில் உள்ள காணிக் கிணறு ஒன்றிலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளரின் கொல்வின் (வயது - 32) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று சிலருடன் ☞2

## உணவுப் பஞ்சம் ஏற்படுவது வழமை; காய்கறிகளை வீட்டில் பயிரிடுங்கள்!

### இப்படிக் கூறுகின்றார் பந்துல



இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்திலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. எனவே, உணவுப் பஞ்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ☞2

# இராணுவ ஆட்சி உடன் வேண்டும்!

## கோட்டாபய நியமித்த 'ஒரே நாடு – ஒரே சட்டம்' செயலணியின் தலைவர் ஞானசாரர் கருத்து



நெருக்கடி நிலைமைகளிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமென்றால் நாட்டை இராணுவத்திடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அதுமட்டுமல்ல இராணுவ ஆட்சி எனக் கூவிக்கொண்டு ஜனநாயகக் கதைகளைக் கூறிவருவோரை சிறையில் அடைக்க வேண்டும். ☞2

## சமையல் எரிவாயு அடுப்பு வெடித்ததில் வீடு தீக்கிரை

### புத்தளத்தில் இன்று அதிகாலை சம்பவம்



புத்தளம் மாவட்டம், குரக்கான்சேனையில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்ததில், வீடும், வீட்டுடன் இருந்த சிறிய வர்த்தக நிலையமும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மூன்று பிள்ளைகளுடன் தனிமையில் வசித்து வரும் பெண்ணொருவர், இன்று அதிகாலையில் தனது பேரப்பிள்ளைக்கு தேநீர் தயாரிக்கத் தண்ணீரைக் கொதிக்க வைக்க எரிவாயு அடுப்பைப் பற்ற வைத்துள்ளார். ☞2

## பஸ் கட்டண அதிகரிப்பு அறிக்கை செவ்வாய் அமைச்சிடம் முன்வைப்பு



பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை போக்குவரத்து அமைச்சிடம் கையளிக்கப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் பேருந்து உரிமையாளர்களுக்கும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, எதிர்வரும் புதன்கிழமைக்குள் புதிய ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## மன்னார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அப்துல் ரசாக் முஹமது ஹவ்ஸ் (வயது - 51) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலத்தில் பலத்த வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 2 சந்தேக நபர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

## ஆழிப்பேரலையின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் முதல் மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா. அரியகுமார், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் யாழ். மாவட்ட இணைப்பாளர் றஜீவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரமுகர், மருதங்கேணி பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி, மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயசிங்க ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அதனைத்தொடர்ந்துநினைவிடத்துக்குக் காணியை அன்பளிப்புச் செய்த ஓய்வுநிலை உதவி அரச அதிபர் புத்திரசிகாமணியின் பாரியார் ஜெகஜோதி பொதுச்சுடர் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் அவர்களின் உறவினர்கள் தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தியமையுடன் அவர்கள் விரும்பி உண்ணும் உணவுகளைப் படைத்து ஒப்பாரிவைத்து ஓலம் இட்டனர். இதனால் அப்பகுதி எங்கும் சோகமயமாகக் காட்சி அளித்தது.

இதேபோல் உடுத்துறை பத்தாம் வட்டாரத்தில் சுமார் 50 உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மணற்காட்டுப் பகுதியில் 72 உடலங்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட சவக்காலைப் பிட்டியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. முன்னதாக மணற்காடு புனித அந்தோணியார் ஆலயத்தில் பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்தைத் தொடர்ந்து சுனாமி நினைவாலயத்தில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 72 உடலங்கள் புதைக்கப்பட்ட சவக்காலைப் பிட்டியில் அவர்களின் உறவினர்கள் உணவுப்பொருள்களை படைத்து பிள்ளைகளின், உறவுகளின், பெற்றோரின் இழப்பைத் தாங்கமுடியாது ஓலமிட்டு கதறி அழுதனர். இதனால் அப் பகுதி எங்கும் சோகமயமாகக் காட்சியளித்தது.

இதேபோல் வடமராட்சி, புலோலி ஆசையப்பர் ஆலயத்தில் உடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக புலோலி ஆசையப்பர் ஆலயத்தில் பருத்தித்துறை கோட்ட பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்தையடுத்து உடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் உறவினர்கள் கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர்.

இதேபோன்று தாளையடி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் அவர்களது உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

## ஐ.நா. நேரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறியதாவது:-

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி இலங்கை போன்ற நாடுகளால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

உள்நாட்டுப்போர் முடிவடைந்த பிறகு, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நான் முக்கியமானதொரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தேன். அதாவது மண்டேலாவின் வழி, முகாபேயின் வழியென இரண்டு வழிகள் உள்ளன. மண்டேலாவின் வழியைத் தெரிவு செய்யுமாறு கோரினேன். ஆனால் முகாபேயின் வழியையே மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்தார். இதன் விளைவு என்ன? ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2015 மார்ச்சில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற அச்சத்தாலேயே முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அவர் தோல்வியைச் சந்தித்தார்.

தற்போதைய அரசும் இதே வழியில் தான் பயணிக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாட்டுக்குத் தோல்வி ஏற்படுகின்றது. சர்வதேச ஒத்துழைப்பு இருந்தால் பல விடயங்களை சாதித்துக்கொள்ளலாம். குறிப்பாக நல்லாட்சியின்போது நாம் அதனை செய்தோம். மின்சாரக் கதிரை அபாயத்திலிருந்து மஹிந்தவைப் பாதுகாத்தோம்.

ஆனால், இந்த அரசால் சர்வதேச ஆதரவைப் பெற முடியாதுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மீண்டும் கூடவுள்ளது. இம்முறை அதனை ஆட்சியாளர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் எனத் தெரியவில்லை, இம்முறை தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டிருக்கமாட்டார்கள், நடைமுறைக்கு சாத்தியமான நடவடிக்கையில் இறங்குவார்கள். ஏனெனில் தீர்மானம் நிறைவேற்றி பயனில்லை என்பதை அறிந்துள்ளனர். இது தொடர்பில் நான் வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்துள்ளேன் - என்றார்.

## இளவாலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணைந்து விருந்தில் கலந்துகொண்டிருந்த குறித்த இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்று பொலிஸாரிடம் கேட்டபோது, விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்தனர்.

## உணவுப் பஞ்சம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பொதுமக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம்முதல்தமதுவீட்டுத்தோட்டங்களில் ஏதாவது காய்கறிகளைக் கட்டாயம் பயிரிட்டுக் கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பு சம்பந்தமாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து வீடுகளிலும் மிளகாய் செடிகள், கத்தரிக்காய் செடிகள், பசலைக் கீரை போன்றவற்றைப் பயிரிடுங்கள். அவற்றைக் குறுகிய காலத்தில் பயன்பாட்டுக்கு எடுக்க முடியும்.

துரித பயிர்ச்செய்கை குறித்த யோசனையை நாங்கள் முன்வைத்துள்ளோம்.

ஜனவரி மாதம் முதல் வீட்டுத் தோட்டங்களில் ஏதாவது ஒன்றைக் கட்டாயம் பயிரிட்டுக்கொள்ளுங்கள் - என்றார்.

## சமையல் எரிவாயு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது, எரிவாயு அடுப்பு திடீரென பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதால், வீடும் தீப்பற்ற ஆரம்பித்துள்ளது.

இதையடுத்து, வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த தனது மூன்று பிள்ளைகளையும் தனது மருமகளையும், பேரப்பிள்ளையையும் வீட்டுக்கு வெளியே அழைத்து வந்த குறித்த தாய், வீடு முழுவதும் பரவிக்கொண்டிருந்த தீயை அணைப்பதற்கு அயலவர்களின் உதவியையும் நாடியுள்ளார்.

எனினும், கூரை தகரத்தாலும் ஏனையவை பலகையாலும் கொண்ட வீடு என்பதால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

குறித்த வீடு முழுமையாகத் தீயில் எரிந்துள்ளது. வீட்டில் இருந்த இருவருக்கு சிறிய தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால், சில்லறைக் கடையுடன் கொண்ட குறித்த வீட்டில் இருந்த அனைத்து ஆவணங்களும் பொருள்களும், ஆடைகளும் தீயால் முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளன என வீட்டு உரிமையாளரான பெண் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## பஸ் கட்டண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டணங்களை அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

எரிபொருள் விலை அதிகரிப்புடன் ஒப்பிடும்போது குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் 20 முதல் 25 ரூபா வரையில் திருத்தப்பட வேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, பஸ்கள் உள்ளிட்ட பொது போக்குவரத்துச் சேவைகளுக்கு எரிபொருள் மானியத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை தனியார் பஸ் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

இல்லையெனில் குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை 25 ரூபாவாக உயர்த்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பூநகரியில் இன்று இளைஞர் ஒருவர் மர்ம மரணம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் இருந்து பூநகரி கௌதாரிமுனைக்குச் சென்ற இளைஞர்களில் ஒருவர் மர்மமான முறையில் இன்று உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டையில் இருந்து கௌதாரி முனைக்கு பட்டா வாகனத்தில் சுற்றுலா சென்ற ஒருவருக்கு நெஞ்சில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் மரணத்திற்கு குழுக்களிற்கு இடையில் மோதலால் ஏற்பட்ட காயம் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இந்த மரணம் தொடர்பில் பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவ ஆட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரும், 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால் தமிழர்களாலும் ஆட்சியை நடத்த முடியும். நீதி அமைச்சர் பதவியிலிருந்து அலி சப்ரி உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு வார இதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யானைக்கு முந்திய மணி ஓசை

**ஆங்கிலத்தில் ஒரு பேச்சு மொழி ஒன்று உண்டு. " The cat has out of the bag " என்பார்கள். கோணிப்பைக்குள் இருந்த பூனை வெளியே வந்து விட்டது என்பது இதன் அர்த்தம். ஒளிவு மறைவாக இருந்த விவகாரம் வெளியே வந்து விட்டது என்பதுதான் இதன் பொருள்.**

**கோட்டாபய ஆட்சிப் பீடத்தின் உள்ளக் கிடக்கை யாது என்பதை அவர் நியமித்த ஜனாதிபதி செயலணியின் வண. கலகொட அத்த ஞானசார தேரர் இப்போது வெளியே கொண்டு வந்து விட்டார்.**

**இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு உரியது – அவர்களுக்கு மட்டுமே உரியது என்ற – மகாவம்ச மனவமைப்பில் பௌத்த, சிங்களப் பேரினவாதச் சிந்தனையில் எழுந்த கட்டமைப்பே "ஒரே நாடு; ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணி என்பதையும், அதன் கோட்பாட்டியல் ரீதியான நோக்கம் அது மட்டுமே என்பதையும் தமது கருத்து வெளியீடு மூலம் அம்பலப்படுத்தியிருக்கிறார் அந்த தலைவர் ஞானசார தேரர்.**

**இலங்கைத் தீவை முழுமையாக பௌத்த, சிங்கள நாடாக மாற்றும் அராஜகத்தை நிலைநாட்ட அவர் காட்டும் வழிதான் உடனடியாக இராணுவ ஆட்சி என்ற அமைப்பாகும்.**

**அவரது அழைப்பும் எதிர்பார்ப்பும் இந்த ஆட்சியாளர்களின் மூளை மையத்தை – சித்தாந்தத்தை – பிரதிபலிக்கின்றதா என்பது வேறு விடயம். ஆனால் அத்தகைய இராணுவ ஆட்சி முறையை ஏற்படுத்தக் கூடிய – அத்தகைய ஆட்சி முறைக்கு வெற்றிலை வைக்கக் கூடிய – கள யதார்த்தங்களும் ஏற்கனவே பூர்த்தியாகி விட்டன என்பது கண்கூடு.**

**நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்க வேண்டும் என்றால் இராணுவத்திடம் உடனடியாக நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்ற ஞானசார தேரரின் கூற்று நாட்டின் ஜனநாயக ஆட்சி முறைக்கு சாவுமணி அடிக்கும் நடவடிக்கை.**

**கோட்டாபய அரசின் தீர்க்கதரிசனமற்ற, அரசியல் விவேகமில்லாத, சீரான பொருளாதாரக் கொள்கையில்லாத, நீதி – நியாயப் போக்கற்ற, எதேச்சதிகார நடவடிக்கைகளினால் நாடு மிக மோசமான இக்கட்டைச் சந்திக்கும் கட்டாயம்**

**இன்னும் ஆறு நாள்களில் – அடுத்த வாரத்தில் – புது வருடம் பிறக்கும் போது நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் இருந்து மீள முடியாத நெருக்கடியைச் சந்திக்கும், கடனிறுக்க வகையற்ற வங்குரோத்து நாடாக இலங்கை அறிவிக்கப்படும் இக்கட்டு எல்லாம் நேரும், என்றெல்லாம் இப்பந்தியில் திரும்ப திரும்ப வலியுறுத்தி வருகிறோம்.**

**இந்த நெருக்கடி எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் கேட்டாபய ராஜபக்ஷவின் மோசமான ஆட்சியே என்றும் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றோம்.**

**தாம் தமது தவறுகளினால் ஏற்படுத்திய மோசமான நெருக்கடிகளைப் பயன்படுத்தியே இராணுவ ஆட்சிக்கு வழி சமைக்கும் நியாயம் வண. ஞானசார தேரரால் கற்பிக்கப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதியும் நன்கு அறிவார்.**

**பேரினவாதியாக தன்னை வெளிப்படுத்தி, அதனைத் தனது அட்டகாச நடவடிக்கைகள் மூலம் நிரூபித்து வந்த வண.ஞானசார தேரரை 'ஒரு நாடு;ஒரு சட்டம்" ஜனாதிபதி செயலணிக்குத் தலைவராக கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த போதே அதன் உள்நோக்கம் குறித்து எல்லோராலும் பேசப்பட்டது.**

**அந்த உள்நோக்கம் யாது என்பது பூனையே இப்போது கோணிப்பைக்குள் இருந்து வெளியே வந்திருக்கின்றது.**

**“யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே” என்பார்கள். மணி ஓசை கேட்கத் தொடங்கிவிட்டது. இனி இராணுவ ஆட்சி என்ற யானை எக்காளமிட்டபடி வரும். அதுதான் இலங்கையின் பேரழிவின் ஆரம்பமாக இருக்கும்.**





## இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு முயற்சி

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இந்தியத் தூதரகத் தரப்பில் இருந்து தொடர்பு கொண்டுள்ளேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டித் துறைமுகத்திற்கு நேற்று (சனிக்கிழமை) விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன் அங்கு தரித்து விடப்பட்டுள்ள இந்தியக் கடற்றொழிலாளர்களின் படகுகளையும் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் – இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி வந்து சட்டவிரோத தொழில் முறைகளைப் பயன்படுத்துகின்ற இந்தியக் கடற்றொழிலாளர்கள் எமது கடற்றொழிலாளர்களின் கடல் வளங்களை அழிப்பதுடன் எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

இதன் காரணமாகவே, அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ‘இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு இந்தியத் தூதரகத் தரப்புக்கள் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளன. கொழும்பு திரும்பிய பின்னர் கலந்துரையாடுவதற்கு சம்மதம் தெரித்துள்ளேன். – என்றும் இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும், விடுவிக்கப்படாத மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி கிழக்கு, மயிலிட்டி தெற்கு, தையிட்டி தெற்கு, பலாலி, மற்றும் வளலாய் போன்ற இடங்களை விடுவித்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்த நிலையில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா–

மேற்படி விடயம் தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதிமற்றும்பிரதமருடன்கலந்துரையாடியுள்ளேன் எனவும், எதிர்வரும் தை மாதம் தொடக்கம் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி 600 கிலோ தங்கத்தை அடகுவைத்த மக்கள்!



கடந்த சில மாதங்களில் மட்டும், ஏற்பட்டுள்ள பொருளாதார பணவீக்கத்தால் நாடு முழுவதும் உள்ள மக்கள் சுமார் 600 கிலோ நகைகளை அடமானம் மற்றும் விற்பனை செய்துள்ளனர் என நகை வர்த்தகத்தில் உள்ள தொழிலதிபர்கள் மற்றும் வங்கியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக புதிய நகைகளைக் கொள்வனவு செய்வது சுமார் 80 வீதத்தால் குறைந்துள்ளதாக கொழும்பில் செட்டியார் தெரு மற்றும் கிரான்பாஸ் பகுதிகளில் உள்ள பல நகைக்கடைகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நகைகளை அடகு வைத்து விற்பனை செய்ய ஆள்கள் வருகின்றமை அதிகரித்து வருவதாகக் கூறும் அவர்கள், இந்நிலையால் தங்களது வருமானம் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பொருளாதாரப் பிரச்சினைகளால் இன்று அதிகமானோர் தங்க முலாம் பூசப்பட்ட நகைகளைப் பயன்படுத்துகின்றனர் எனவும், இதன் காரணமாக வருமானம் குறைந்துள்ளதாகவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

வங்கி பெட்டகங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நகைகளை மீள்பெற்றுக் கொள்ள ஏராளமானோர் ஆசைப்படுகின்றனர் எனப் பல வங்கிகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, அண்மைக்காலமாக நகைக் கடைகள் மற்றும் நகைகளைக் கொள்ளையடிக்கும் சம்பவங்களும் கணிசமாக அதிகரித்துள்ளன எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# ஜின்ஜியாங் தலைமை அதிகாரியை நீக்கியது சீனா




அமெரிக்காவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ஜின்ஜியாங் மாகாண தலைமை அதிகாரியை சீன அரசு திடீரென நீக்கியுள்ளது.

இதுகுறித்து சீன அரசுச் செய்தி நிறுவனமான ஜின்ஹுவா நேற்றுக் கூறுகையில், ஜின்ஜியாங் உய்கர் தன்னாட்சிப் பிரதேசக் குழு செயலர் பதவியிலிருந்து சென் குவாங்குவோ நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தது. சீனாவின் சிறுபான்மை இனத்தவர்களான உய்கா முஸ்லிம்கள், அந்த நாட்டின் ஜின்ஜியாங் மாகாணத்தில் பெருமளவில் வசித்து வருகின்றனர்.

அவர்கள் மீது சீன அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. அந்த மாகாணத்தின் நிர்வாகத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த சென் குவாங்குவோ மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் குற்றம் சாட்டின. இதுதொடர்பாக அவர் மீது பொருளாதாரத் தடைகளையும் அந்த நாடுகள் விதித்துள்ளன.

இந்தச் சூழலில், ஜின்ஜியாங் மாகாணத்தில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை ராஜீய ரீதியில் புறக்கணிப்பதாக அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகள் சிலவும் அண்மையில் அறிவித்தன. மேலும், ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்கா இனத்தவாகள் கட்டாயத் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர் எனக் குற்றம் சாட்டி வரும் அமெரிக்கா, அங்கிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடுகள விதிக்கும் சட்டத்தை அண்மையில் நிறைவேற்றியது.

இந்தச்சூழலில், அந்த மாகாணத் தலைமைப் பொறுப்பிலிருந்து சாச்சைக்குரிய சென் குவாங் குவோ நீக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உணவகத்தில் குண்டுவெடிப்பு; ஆறு பேர் பரிதாப உயிரிழப்பு



கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்கு நகரமான பெனியில் உள்ள உணவகம் ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 6 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் தற்கொலை குண்டுதாரியை கட்டிடத்திற்குள் நுழைவதைத் தடுத்தபோதும் அவர் நுழைவாயிலில் தன்னைத்தானே வெடிக்கச் செய்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகைக்காக சுமார் 30 பேர் நிரம்பியிருந்த உணவகத்தில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் ஐவர் உயிரிழந்ததாகவும் 13 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒரு போராளிக் குழுவே நேற்று இந்த தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது.

இருப்பினும் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி விண்ணில் செலுத்தியது நாசா



உலகின் மிகப்பெரிய, சக்திவாய்ந்த தொலைநோக்கி செயற்கைக்கோளை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா நேற்று விண்ணில் செலுத்தியது.

'ஜேம்ஸ் வெப்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி தொலைநோக்கி தென் அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள கடலோரப் பகுதியான பிரெஞ்ச் கயானாவில் உள்ள ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து ஐரோப்பிய ஏரியானே ரொக்கெட் மூலம் செலுத்தப்பட்டது.

1,000 கோடி டொலர் (ரூ.75,000 கோடி) செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தத் தொலைநோக்கி 16 லட்சம் கி.மீற்றர் தொலைவை கடந்து விண்வெளியில் நிலைநிறுத்தப்படும். அந்தத் தொலைவை அடைவதற்கு ஒரு மாதமாகும். அதன்பிறகு தொலைநோக்கியின் அகச்சிவப்பு கதிர்கள் மூலம் பிரபஞ்சத்தை ஆய்வு செய்யத் தயாராவதற்கு மேலும் 5 மாதங்கள் ஆகும்.

இதுகுறித்து நாசா நிர்வாகி பில் நெல்சன், 'நமது பிரபஞ்சம், அதில் பூமி இடம்பெற்றுள்ளது குறித்து சிறப்பான புரிதலை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி தரப்போகிறது' எனத் தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சத்தின் தொடக்கமாக கருதப்படும் பெருவெடிப்புக்கு (பிக் பாங்) பின்னர் உருவான ஆரம்பகால நட்சத்திரங்கள் குறித்து ஆய்வு செய்வதும், பிரபஞ்சம் குறித்த கூடுதல் தகவல்களை அறிந்து கொள்வதுமே ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் பிரதான நோக்கமாகும்.

இதற்கு முன்னா செலுத்தப்பட்ட ஹபிள் தொலைநோக்கிக்கு மாற்றாக இந்த ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி இருக்கும். நாசாவின் நிர்வாகியாக 1960 களில் இருந்த ஜேம்ஸ் பெயர் இதற்குச் சூட்டப்பட்டுள்ளது. 7 தொன் எடை கொண்ட இந்த மிகப்பெரிய தொலைநோக்கியை உருவாக்கும் பணி 1990 இல் தொடங்கியது. நாசாவுடன் ஐரோப்பா மற்றும் கனடா விண்வெளி ஆய்வு நிறுவனங்களும் இதை உருவாக்கும் பணியில் பங்கெடுத்துள்ளன. இதில் தங்க முலாம் பூசப்பட்ட 21 அடி விட்டம் கொண்ட பிரதான கண்ணாடி இடம்பெற்றுள்ளது. இத்துடன் பிற உபகரணங்களும் சேர்த்து இந்தத் தொலைநோக்கி ஒரு டென்னிஸ் மைதானத்தின் அளவில் இருக்கிறது. இது மிகப்பெரியதாக இருந்தாலும், ரொக்கெட் மூலம் செலுத்தப்படும்போது மடித்து பொருத்தப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் தினத்தில் செலுத்தப்பட்டதாலும், கொரோனா பரவல் காரணமாகவும் பிரெஞ்ச் கயானாவில் உள்ள ஏவுதளத்தில் எதிர்பார்த்ததைவிட குறைவான பார்வையாளர்களே ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி செலுத்தப்படுவதைக் காண வந்திருந்தனர்.

# பங்களாதேஷில் பயணிகள் கப்பல் தீப்பற்றி எரிந்ததில் 40 பேர் சாவு



பங்களாதேஷ் – ஜலகதி மாவட்டத்தில் உள்ள சுகந்தா நதியில் 800 பேருடன் சென்ற பயணிகள் கப்பல் ஒன்று இன்று தீப்பிடித்து எரிந்ததில் குறைந்தது 40 பேர் உயிரிழந்தனர். 150 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மேலும் பலர் காணாமல் போயுள்ளனர்.

டாக்காவிலிருந்து பயணத்தைத் தொடங்கி பர்குனா நோக்கிச் சென்று கொண்டிருந்த எம்.வி.அபிஜன் 10 (MV Abhijan-10) என்ற பயணிகள் கப்பலின் இயந்திர அறையில் உள்ளூர் நேரப்படி இன்று அதிகாலை 3 மணியளவில் தீப்பரவல் ஏற்பட்டதாக தீயணைப்பு சேவை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீயில் கருகியும், தீ விபத்தில் இருந்து தப்ப ஆற்றில் குதித்து நீரில் மூழ்கியும் அதிக பயணிகள் உயிரிழந்தனர் என சம்பவ இடத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

விபத்துக்குள்ளான கப்பலில் அதன் திறனுக்கு மேல் அதிகளவானவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டனர். பயணிகளில் பெரும்பாலானோர் வார இறுதி விடுமுறைக்காக வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தவர்கள் எனத் தெரியவருகிறது. இந்தத் தீ விபத்துக்கான காரணத்தை கண்டறிய ஏழு பேர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. 3 நாள்களுக்குள் இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவுக்குப் பணிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் கூறினர். இதேவேளை, காயமடைந்த பலர் ஆபத்தான நிலையில் உள்ளமையால் இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடுமென மீட்புக் குழுவினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

சுமார் 3 மணி நேரம் கப்பல் கொழுந்துவிட்டு எரிந்த நிலையில் பல பயணிகள் ஆற்றில் குதித்து உயிர் தப்பினர். தீயணைப்பு சேவை துணை பணிப்பாளர் கமல் உதின் புயான் தலைமையில் 15 தீயணைப்புப் பிரிவுகள் அதிகாலை 3:50 மணிக்கு சம்பவ இடத்துக்குச் சென்று அதிகாலை 5:20 மணிக்கு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தன.

பங்களாதேஷில் இது போன்ற படகு மற்றும் கப்பல் விபத்துக்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. இந்த ஆண்டு மே மாதம் சிறுவன் ஓட்டிச் சென்ற வேகப் படகு மணல் ஏற்றிய கப்பலுடன் மோதி கவிழ்ந்ததில் குறைந்தது 26 பேர் உயிரிழந்தனர். கடந்த ஆண்டு ஜூன் மாதம் 100க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று மற்றொரு படகுடன் மோதியதில் 32 பேர் இறந்தனர்.

2015 பெப்ரவரி ஒரு சரக்குக் கப்பலுடன் மற்றொரு கப்பல் மோதியதில் குறைந்தது 78 பேர் பலியானமையும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் இருந்து வரும் சகலருக்கும் ஏழு நாள்கள் தனிமைப்படுத்தல் கட்டாயம்




## தமிழக அரசு உத்தரவு

இந்தியாவில் ஒமிக்ரோன் வைரஸ் திரிவின் பரவல் வேகம் எடுத்துள்ளது. நேற்றையதரவுகளின்படி 415 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து பெருந்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

தமிழகத்தில் கடந்த ஒரு மாதத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களில் 34 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதியானது. இதையடுத்து தடுப்புநடவடிக்கைகளை தமிழக அரசு அதிகரித்துள்ளது.

சென்னை அரசு மருத்துவமனையில் ஒமிக்ரோன் தொற்றுக்குச் சிகிச்சை பெற்றுவருபவர்களை தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பார்வையிட்டு நலம் விசாரித்தார். பின்னர் அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்திருந்தார். அப்போது அவர், மத்திய அரசின் வழிகாட்டுதல்படி வெளிநாடுகளில் இருந்து வருபவர்களில் குறிப்பிட்ட 12 நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு மட்டுமே 100 சதவீதமானோருக்கும் ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படுகிறது.

மற்ற நாடுகளில் இருந்து வருபவர்களில் உத்தேசமாக 2 சதவீதம் பேருக்குத்தான் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட 12 நாடுகளைத் தவிர, ஒமிக்ரோன் தொற்று இல்லாத நாடுகளில் இருந்து வந்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கும் மரபியல் மாற்ற வைரஸ் தொற்று உடலிலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களில்தான் பலருக்கு ஒமிக்ரோன் தொற்றும் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களில் தமிழகத்துக்கு வந்தமூவாயிரம்பேருக்குப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் மேலும் 39 பேருக்கு ஒமிக்ரோனுக்கு முந்தைய மரபியல் மாற்ற அறிகுறி உறுதியாகியுள்ளது. அவர்களுடைய மாதிரிகள் பெங்களூர் மற்றும் புனேவுக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் 5 நாள்களுக்குள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபற்றி இந்திய மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கக் கேட்டு ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதேவேளை, 26 ஆம் திகதி முதல் தமிழக அரசு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை அமுல்படுத்துகிறது. அதன்படிஒமிக்ரோன்ஆபத்துகுறைவாக உள்ள நாடுகள் உள்பட அனைத்து வெளிநாடுகளில் இருந்து வருபவர்களும் தங்கள் வீடுகளில் 7 நாள்கள் கட்டாயம் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். எட்டாவது நாள் மீண்டும் பரிசோதனை செய்யப்படும். அப்போது தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டால் தான் வெளியே நடமாட அனுமதிக்கப்படுவார்கள்.

ஒமிக்ரோன் தொற்று குறைவான, ஆபத்து இல்லாத நாடுகளிலிருந்து வருபவர்களுக்கும் இனி 10 சதவீதமானோருக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டவர்களில் 27 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். அவர்களில் சிலர் சிகிச்சை முடிந்து வீடுதிரும்புகிறார்கள். எனவே, பாதிக்கப்பட்ட 34 பேரில் 12 பேர் குணமடைந்துள்ளனர்.

ஒமிக்ரோன் நெருக்கடியான இந்த சூழலிலிலும்கூட புத்தாண்டு, பொங்கல் போன்ற பண்டிகைகளை கொண்டாடி மகிழ்ந்து மனங்களை உற்சாகமாக வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம் தான். இருந்தாலும், ஆபத்து இல்லாமல் கொண்டாடவேண்டியது அதைவிட அவசியம். எனவே பண்டிகைக் கொண்டாட்டங்களை வீடுகளிலேயே மேற்கொள்ளுங்கள்.

இந்த ஆண்டு ஒமிக்ரோன் அச்சுறுத்தலால் நட்சத்திர விடுதிகளில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களைத் தவிர்க்கவேண்டும் என்பதை தமிழக அரசு அனைவரிடமும் வேண்டுகோளாக முன் வைக்கிறது. கூட்டமாக புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். நட்சத்திர விடுதிகள் மற்றும் பண்ணை வீடுகளிலும் புத்தாண்டு நிகழ்ச்சிகளை யாரும் நடத்தக் கூடாது என்றும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக வெளி மாநிலங்களுக்கு யாரும் செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

இதுபோன்ற வழிமுறைகளை சகலரும் பின்பற்றி ஒமிக்ரோன் பரவலைத் தடுக்க ஒத்துழைக்க வேண்டும், என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.



## தமிழகத்தில் ஜனவரி மூன்றாம் திகதி முதல் 15 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி

தமிழகத்தில் கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தவும், ஒமிக்ரோன் பரவல் அதிகரிக்காமல் தடுக்கவும், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக மாநிலம் தழுவிய அளவில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடுத்தகட்டமாக வரும் ஜனவரி மூன்றாம் திகதி முதல், 15 வயது முதல் 18 வயதுவரையான சிறார்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படவிருக்கிறது.

இந்தத்தடுப்பூசியைச்செலுத்திக்கொள்வதற்கு மொத்தம் 33 லட்சம் பேர் தகுதிபெற்றவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

அத்தோடு, ஜனவரி 10 ஆம் திகதி முதல் பூஸ்டர் டோஸ் தடுப்பூசியும் செலுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குபூஸ்டர்டோஸ்தடுப்பூசிசெலுத்தப்படவிருப்பதாகத் தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒமிக்ரோன் தடுப்பு நடவடிக்கை; தமிழகம் செல்கிறது மத்திய குழு



இந்தியா முழுவதும் 17 மாநிலங்களில் ஒமிக்ரோன் பரவி உள்ள நிலையில் தொற்று எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன் ஒருகட்டமாக ஒமிக்ரோன் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைக்காக பல்வேறு துறைகளையும் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய மத்தியகுழுவொன்று தமிழகத்துக்குச் செல்லவுள்ளது. கேரளா, மகாராஷ்டிரா, கர்நாடகா, உத்தரப் பிரதேசம், பீகார், மேற்குவங்கம், ஜார்க்கண்ட், பஞ்சாப், மிசோரம் போன்ற மாநிலங்களுக்கும் அந்தக்குழு விரைகிறது.

அதிக ஒமிக்ரோன் பாதிப்பு மற்றும் குறைவான தடுப்பூசி செலுத்தல் வீதமுள்ள 10 மாநிலங்களில் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக கொரோனாத் தடுப்பு மற்றும் தடுப்பூசிப் பணிகளை துரிதப்படுத்தத் தேவையான ஆலோசனைகளை மத்தியகுழு வழங்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.





சொர்க்கம் திருமண சேவை
இல.102/ A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 15.08.1984 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - உத்தரட்டாதி<br>கி.பா - செவ் -<br>தகைமை - A/Level. தொழில் - Vehicle Valuation<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் சாதாரண பெண் | பிறந்த திகதி - 04.01.1994 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - அஸ்தம்<br>கி.பா - செவ் - 7 இல் சூரி/ செவ்<br>தகைமை - BA தொழில் - அரச தொழில்<br>எதிர்பார்ப்பு - அரச தொழில் புரியும் மணமகன் |
| பிறந்த திகதி - 18.02.1984 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - உத்தரம் 1ம் பாதம்<br>கி.பா - செவ் - லக்/ செவ்வாய்<br>தகைமை - A/Level. தொழில் - கனடா- Plumbing<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் பெண் | பிறந்த திகதி - 28.01.1986 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - மகம்<br>கி.பா - செவ் - லக்/ செவ்<br>தகைமை - Msc தொழில் - Reach Scholar<br>எதிர்பார்ப்பு - அரச தொழில் புரியும் மணமகன் |
| பிறந்த திகதி - 01.10.1992 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - கேட்டை<br>கி.பா - செவ் -<br>தகைமை - Life Science தொழில் - கனடா- Bank<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் பெண் | பிறந்த திகதி - 07.10.1991 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - உத்தரம் 4 ம் பாதம்<br>கி.பா - செவ் - 2இல் சூரி/ செவ்<br>தகைமை - Msc Computer Science தொழில் - Lecturere<br>எதிர்பார்ப்பு - அரச தொழில் or வெளிநாடு |
| பிறந்த திகதி - 20.07.1979 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - ரோகிணி<br>கி.பா - செவ் -<br>தகைமை - A/Level தொழில் - கனடா<br>எதிர்பார்ப்பு - யாழ்ப்பாணப் பெண் | பிறந்த திகதி - 03.12.1980 மதம் - இந்து<br>ஜாதி -V நட்சத்திரம் - சித்திரை 1 ம் பாதம்<br>கி.பா - செவ் - 2இல்<br>தகைமை - Bsc தொழில் - Development Officer<br>எதிர்பார்ப்பு - அரச தொழில் மணமகன் |

077 650 5097
077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா
001415666611855

# காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொத்துவில் மக்களுக்கு காணி அமைச்சர் உறுதி





நாட்டைக் கட்டியெழுப்பும் 'சௌபாக்கியத்தின் நோக்கு' தேசிய கொள்கை திட்டத்துக்கு அமைய காணி அளிப்பு மற்றும் உத்தரவுப் பத்திரம் வழங்கும் நிகழ்வு பொத்துவில் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரபின் அழைப்பில், காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

பொத்துவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுமார் 75 பயனாளிகளுக்கு குடியிருப்பு மற்றும் விவசாய காணிகளுக்கான அளிப்புப் பத்திரம் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் முதற்கட்டமாக வழங்கி வைக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேசத்தில் அளிப்பு பத்திரம் மற்றும் உத்தரவுப்பத்திரம் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி முஷாரப் தொடர்ச்சியாக முயற்சிகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் உரையாற்றிய காணி அமைச்சர் எஸ். எம். சந்திரசேன –

பொத்துவில் பிரதேசத்தில் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து மக்களுக்கு அவற்றை சட்டரீதியாகப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் என்னை அடிக்கடி சந்தித்து அம்பாறை மாவட்டத்திலுள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வைப் பெற்றுத் தருமாறு தொடர்ச்சியாக வேண்டிக் கொண்டுள்ளார்.

இவ்வாறான அர்ப்பணிப்புடன் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினரை நான் பாராட்டுவதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்

# ஜோசப் நினைவு நிகழ்வுகள் மட்டக்களப்பிலும் நடந்தன




நத்தார் திருப்பலி பூஜையின்போது ஆயுதக் குழுவால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அமரர் ஜோசப்பரராஜசிங்கத்தின் 16 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

25.12.2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் தேவாலயத்தில் நள்ளிரவு நத்தார் ஆராதனையின்போது இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அமரர் ஜோசப்பரராஜசிங்கத்தின் 16 ஆவது நினைவு தினம் நேற்று பிற்பகல் மட்டக்களப்பில் இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிபமுன்னணியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

நிகழ்வுக்கு முன்பாக அன்னாரின் படுகொலைக்கு நீதிவேண்டி மட்டக்களப்பு நகரில் உயிர்நீர்த்த ஊடகவியலாளர் நினைவுத் தூபியருகிலிருந்து நிகழ்வு நடைபெறும் சார்ள்ஸ் மண்டபம் வரையில் கைகளிலும், கழுத்திலும் கறுப்பு பட்டியணிந்து ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலைசெய்யப்பட்ட புனித மரியாள் பேராலயம் வரையில் வருகைதந்து அங்கு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சார்ள்ஸ் மண்டபத்தில் தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தீபாகரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது அமரர் ஜோசப்பரராஜசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மலர் மாலையை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிதலைவர் கி.சேயோன், மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தீபாகரன் ஆகியோர் அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பொன்.செல்வராஜா, தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு கிராமத்துக்குள் புகுந்தது இராட்சத முதலை!

## பீதியில் மக்கள்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதிர்காமர் வீதி கிராமத்துக்குள் புகுந்த முதலையொன்றைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மட்டிக்களி – கதிர்காமர் வீதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் உலாவிய குறித்த முதலையைக் கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கும், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து மேற்படி இடத்துக்கு வருகைதந்த கல்லடி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த முதலையைப் பாதுகாப்பாக மீட்டு செங்கலடி கறுத்த பாலத்துக்கு அருகிலுள்ள குளம் ஒன்றில் விடுவித்தனர் எனத் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சுமார் 07 அடி நீளத்தைக் கொண்ட மேற்படி முதலை குறித்த கிராமத்துக்கு அருகிலுள்ள தோனா (நீர்நிலை) பகுதியிலிருந்து வந்திருக்கலாமென அப்பகுதி மக்கள் தெரிவித்தமையுடன், அப்பகுதியைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் அதனைப் பார்வையிடுவதற்காக வருகைதந்திருந்தமையுடன், அப்பகுதியில் அச்சநிலையும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஜப்னா வொலிபோல் லீக் பிளே ஓவ் சுற்று இன்று ஆரம்பம்



யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்முறையாக நடைபெற்றுவரும் ஜப்னா வொலிபோல் லீக் (ஜே.வி.எல்.) தொடரின் பிளே ஓவ் சுற்றுக்கு, ஆவரங்கால் கிங் பைட்டர்ஸ், அரியாலை கில்லாடிகள் -100, சென்ரல் ஸ்பைக்கர்ஸ் அச்சுவேலி மற்றும் ரைஸிங் ஐலண்ட்ஸ் ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் கரப்பந்தாட்ட வீரர்களை ஏல முறையில் அணிகளில் இணைத்து முதன்முறையாக கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட, ஜப்னா வொலிபோல் லீக் தொடர் கொவிட்-19 காரணமாக ஒத்திவைக் கப்பட்டிருந்தது.

மீண்டும் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்ட போட்டித் தொடரின் லீக் போட்டிகளின் முடிவில், ஆவரங்கால் கிங் பைட்டர்ஸ் அணி 7 வெற்றிகளுடன் 20 புள்ளிகளை பெற்று, புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை பிடித்துக்கொண்டது. இரண்டாவது இடத்தை 4 வெற்றிகளுடன் 14 புள்ளிகளை பெற்று, அரியாலை கில்லாடிகள் அணி பிடித்துக்கொண்டது. மூன்றாவது இடத்தை 13 புள்ளிகளுடன் சென்ரல் ஸ்பைக்கர்ஸ் அச்சுவேலி அணி பிடிக்க, நான்காவது இடத்தை 12 புள்ளிகளுடன் ரைஸிங் ஐலண்ட்ஸ் அணி தனதாக்கிக்கொண்டது.

முதலிரண்டு இடங்களை பிடித்துள்ள இரண்டு அணிகளும் முதலாவது தெரிவுப்போட்டியில் போட்டியில் விளையாடவுள்ளன. இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும். தோல்வியடையும் அணி, மூன்றாவது மற்றும்நான்காவது இடங்களுக்கான வெளியேற்றுப் போட்டியில் வெற்றிபெறும் அணியை, இரண்டாவது தெரிவுப் போட்டியில் எதிர்கொள்ளும். இரண்டாவது தெரிவுப்போட்டியில் வெற்றிபெறும் அணி, முதல் குவாலிபையரில் வெற்றிபெற்ற அணியுடன் இறுதிப் போட்டியில் விளையாடும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் தகுதிப்போட்டி மற்றும் வெளியேற்றுப் போட்டிகள் இன்றைய தினம் கீழ் நடைபெறுகின்றன. இரண்டாவது தெரிவுப்போட்டி போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# ஆஷஷ் தொடரின் மூன்றாவது போட்டி முதல்நாளில் ஆஸ்திரேலியா ஆதிக்கம்



ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 'பொக்சிங் டே' டெஸ்ட் போட்டி மெல் போர்னில் இன்று ஆரம்பமானது.

ஆஷஷ் தொடரின் இந்த மூன்றாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றஆஸ்திரேலிய அணி, களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இங்கிலாந்து அணி, தடுமாற்றத்துடனேயே தனது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட, 65.1 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களை மட்டுமே இங்கிலாந்து அணியால் பெறமுடிந்தது. அணித்தலைவர் ஜோ ரூட் 50 ஓட்டங்களையும், ஜொனி பெயர்ஸ்டோ 35 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ், லயொன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மிட்ச்செல் ஸ்ட்ராக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதையடுத்து தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி முதல் நாள் நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 61 ஓட்டங்களை எடுத்திருந்தது. டேவிட் வோனர் 38 ஓட்டங்களை எடுத்திருந்தவேளையில் அன்டர்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். நாளை போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் தொடரவுள்ளது.



# இந்திய – தென்னாபிரிக்க முதல் டெஸ்ட் ஆரம்பம்

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி செஞ்சூரியனில் இன்று நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தனது மதல் இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணி, மதிய போசன நேர இடைவேளைவரை விக்கெட் இழப்பின்றி 83 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மயங்க் அகர்வால் 46 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் 29 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

# போட்டியின் நடுவே மாரடைப்பு கால்பந்து வீரர் லோவ்கர் மைதானத்திலேயே சாவு



வடக்கு ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவைச் சேர்ந்த கால்பந்தாட்ட வீரர் போட்டியினிடையே மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் விளையாட்டுலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எம்.சி.எஸ். கால்பந்தாட்ட கழக அணிக்காக விளையாடிவந்த அல்ஜீரியாவைச் சேர்ந்த 30 வயதான சோபியேன் லோவ்கர் என்ற வீரரே இவ்வாறு போட்டியின்போது உயிாழந்திருக்கிறார்.

அல்ஜீரியன் லீக்-2 கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது பிரிவு ஆட்டம் நேற்று ஓரான் கால்பந்து மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியின் முதல் பாதியில், சோபியேன் லோவ்கர் பந்தை விரட்டி ஓடிக்கொண்டிருந்தபோது அவரது அணியை சேர்ந்த கோல் மீது எதிர்பாராத விதமாக மோதினார். அதன் பின், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மீண்டும் தொடர்ந்து விளையாடினார். ஆனால், மீண்டும் விளையாட வந்த 10 நிமிடங்களிலேயே அவர் கீழே மயங்கி விழுந்தார். உடனே அவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். ஆனால், செல்லும் வழியிலேயே மாரடைப்பால் மரணமடைந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


இந்தச் சோகச் செய்தியை அறிந்ததும் இரு அணி வீரர்களும் போட்டியை உடனடியாகவே முடித்து கொண்டனர்.

ஆட்டம் இரத்தானதாக அறிவிக்கப்பட்டது. அவரது உலகக் கால்பந்தாட்ட ரசிகர்களிடையே மிகுந்த சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இரு அணி வீரர்களும் மைதானத்திலேயே கதறி அழுதது பார்வையாளர்களின் கண்களையும் குளமாக்கியது.

கடந்த ஒரே வாரத்தில் குரோஷிய கால்பந்து வீரர் மரின் காசிக், ஓமன் தேசிய அணி வீரர் முகலேட் அல்-ரகாடி மற்றும் எகிப்திய கோல் காப்பாளர் அகமட் அமீன் ஆகியோரும் மாரடைப்பால் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்களுடன் நான்காவது வீரராக சோபியேன் லோவ்கரும் சேர்ந்தமை, கால்பந்தாட்ட ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளார்.

# நாணய நிதியத்தை நாடுவதை தவிர மீட்சிபெறுவதற்கு வேறு வழியில்லை!

## மீண்டும் வலியுறுத்துகிறார் ரணில்



கொவிட் காரணமாக பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கி வரும் ஆறு நாடுகள் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று தமது நெருக்கடிக்குத் தீர்வுகாண உதவியை பெற்றுக் கொண்டுள்ளன என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நாணய நிதியத்திடம் உதவிகளை பெற்றுக் கொண்ட நாடுகளில் எந்த நாட்டுக்கும் பாதிப்பான மற்றும் நிறைவேற்ற முடியாத நிபந்தனைகள் எதனையும் நிதியம் விதிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கி இருக்கும் டொலர் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைத் தவிர வேறு மாற்று வழியில்லை எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

உடனடியாக சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று டொலர் நெருக்கடி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி இருந்தார். சர்வதேச நாணய நிதியம், கடனுதவியை வழங்கும் போது, நிறைவேற்ற முடியாத மற்றும் பாதிப்பான நிபந்தனைகளை விதிக்காது என எண்ணுகிறேன் எனவும் அவர் கூறியிருந்தார். நாட்டின் பயன்பாட்டுக்குத் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான டொலர்கள் கூட இலங்கையின் கையிருப்பில் இல்லை.

எரிபொருளுக்கான மானியத்தைப் பெற அரசாங்கம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. இதனால், சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரதான வீதியில் மழைநீர் காரைநகர் மக்கள் அவதி

*காரைநகர் - சக்களாவோடை பிரதான வீதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் அப்பகுதி மக்கள் அந்தரிக்கின்றனர்.*

*பிரபல பாடசாலை மற்றும் சுற்றுலா மையமான கசூரினா கடற்கரைக்குச் செல்லும் வீதியாக இந்த வீதி காணப்படுகின்றதுடன், இது பிரதான வீதியாகவும் காணப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அந்தரிக்கின்றனர்.*

*அப்பகுதி மக்கள் இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில் -*

*காரைநகர் பகுதி மக்கள் மாத்திரமன்றி சுற்றுலாப்பயணிகள் வருகைதரும் வழியாகவும் இந்தப்பாதை காணப்படுகிறது.*

*இந்த வீதியால் 782, 784 மற்றும் 785 ஆம் இலக்க வழித்தட பஸ்கள் பயணிக்கின்றன. சுமார் 15 நாள்களுக்கு முதல் பெய்த மழைநீரே இன்னமும் வழிந்தோடவில்லை. மழைநீர் தேங்கி நிற்கும்போது வீதியில் உள்ள குன்று குழிகள் வெளியே தெரிவதில்லை.*

*இதனால் விபத்துக்களும் சம்பவிக்கின்றன. வீதியைப் புனரமைப்பதற்கு முன்னர் மழைநீர் வழிந்தோட வடிகாலமைப்பு செய்ய வேண்டும்.*

*வடிகாலமைப்பு செய்யாமல் வீதியைத் திருத்தம் செய்தாலும் எந்த பிரயோசனமுமில்லை. எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு வடிகாலமைப்பைச் செய்வதோடு இந்த வீதியையும் விரைவில் செப்பனிட்டுத் தருமாறு கேட்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.*





# ஓட்டோ – மோட்டார் சைக்கிள் மோதி வவுனியாவில் விபத்து

வவுனியாவில் ஓட்டோ – மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா ரயில் நிலைய வீதியில் நேற்று (சனிக்கிழமை) மதியம் இந்த விபத்து இடம்பெ ற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, ரயில் நிலைய வீதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் முன்பாக மாணவி ஒருவரை இறக்கி விட்டு வவுனியா நகரை நோக்கிச் செல்வதற்காக வீதியின் குறுக்கே ஓட்டோ ஒன்று திரும்ப முற்பட்ட போது குருமன்காடு பகுதியிலிருந்து ரயில் நிலைய வீதி ஊடாக வந்த மோட்டர் சைக்கிளுடன்மோதிவிபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோ சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி என இருவரும் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த இருவரும் நோயாளர் அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரஞ்சனை சிறைசென்று பார்வையிட்டார் ஹரின்

மிகவும் கஷ்டமான, கசப்பான அனுபவமாக இருந்தாலும் அந்த அனுபவத்தை எதிர்கொண்டு மிகவும் தைரியமாக ரஞ்சன் ராமநாயக்க இருக்கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று (சனிக்கிழமை) நேரில் சென்று பார்த்த பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எனது அன்புக்குரிய நண்பன், நேசத்துக்குரிய போராட்ட தோழன் ரஞ்சன் ராமநாயக்கவை பார்க்க நான் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றேன். கடினமான, கசப்பான அனுபவமாக இருந்தாலும் அதனை எதிர்கொண்டு, மிகவும் தைரியமாக ரஞ்சன் இருக்கின்றார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுப்படுத்த வேண்டும்.

தவறான வார்த்தை வெளியிட்ட தவறுக்காக ரஞ்சன் பாரதூரமான தண்டனை அனுபவித்துக்கொண்டு சிறையில் இருக்கின்றார். நாட்டின் அண்மைய கால வரலாற்றில் அதிர்வை ஏற்படுத்திய ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் சுதந்திரமாக வெளியில் இருக்கின்றனர்.

சீனியிலும் கோடிக்கணக்கில் மோசடி செய்தவர்கள் சுதந்திரமாக இருக்கின்றனர். அப்பாவி விவசாயிகளுக்கான மலக் கழிவைக் கொண்டு வந்து, அதன் மூலம் கோடிக்கணக்கில் இழப்பீடு செய்ய தீர்மானித்தவர்கள் சுதந்திரமாக இருக்கின்றனர்.

எனினும் ஒரு வார்த்தையின் தவறுக்காக ரஞ்சன் சிறைக்குள் தண்டனை அனுபவித்து வருகிறார்.

இன்று புனிதமான நத்தார் தினம். சமாதானத்தின் செய்தியை வார்த்தைகளால் உலகத்துக்குக் கொண்டு வந்த புனிதரின் பிறந்த தினம்.

உண்மையில் ரஞ்சன் என்னிடம் ஒரு கோரிக்கை விடுத்தார். அனைத்து கிறிஸ்தவர்கள் மற்றும் இலங்கை மக்கள் இனிய நத்தாரைப் பிரார்த்தித்தார். இரண்டாவது அவருக்கு உயர் கல்வி கற்கும் தேவை இருப்பதாகவும் அதற்கான வசதி வாய்ப்புகளை எதிர்பார்க்கிறேன் எனவும் ரஞ்சன் உணர்வுபூர்வமாகக் கூறினார்.

ரஞ்சனின் விடுதலைக்காக போராடும் அனைவருக்கும், அமைதியாக அதற்கு ஆதரவு வழங்குவோருக்கும் தனது நன்றியை ரஞ்சன் தெரிவித்துக் கொண்டார்.

ரஞ்சனின் விடுதலைக்காக நாங்கள் 2022 ஆம் ஆண்டு மிகவும் தீவிரமாகப் போராடுவோம். இது எனது வாக்குறுதி. அத்துடன் ரஞ்சன் விடுதலையானால், எனது தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவருக்கு வழங்க நான் இரண்டு முறை யோசிக்க மாட்டேன் என ரஞ்சனிடம் வாக்குறுதியளித்தேன்.

நல்ல மனிதர் தனது மனதுக்குள் புதைத்து வைத்த நல்லதையும், கெட்ட மனிதன் தனது மனதுக்குள் புதைத்து வைத்துள்ள கெட்டதையும் வெளியிடுவான் என பைபிலில் கூறப்பட்டுள்ளது.



நாங்கள் இந்த நாட்டில் நியாயத்தை மதிக்கும் அனைத்து மக்களிடமும் கோரிக்கை விடுக்கின்றோம்.

‘நீதிபதி’ என்ற வார்த்தைக்காக ரஞ்சன் நான்கு ஆண்டுகளுக்கு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த தவறுக்காக அவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது நியாயமா, என சிந்தித்துப் பாருங்கள். இந்த புனிதமான நத்தார் நாளில் நான் கடவுளிடம் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றேன். ‘தேவனே இவர்கள் தெரியாமல் செய்த தவறுக்காக இவர்களை மன்னியும்’ என ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2021இல் வெளியிடப்பெற்றது.